# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,897—1970 මාර්තු 13 වැනි සිකුරාදා—1970.3.13

14,897 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 83 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 91 | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 95 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 95 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல். டி. பி. 3/60

### நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு கடவைகள் கிராமச் சபை

#### தெருவில் தருமப்பணம் திரட்டுவதை ஒழுங்குபடுத்தல் கட்டளைச் சட்டம்

1958 ன் 38 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (478 ம் அத்தியாயமான) தெருவில் தருமப்பணம் திரட்டுவதை ஒழுங்குபடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு கடவைகள் கிராமச் சபையின் பொருட்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு சொல்லப்பட்ட பிரிவின் கீழ் மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் உ.

ஆர். ප්‍රේමදාස,
உள்ளூராட்சி அமைச்சர்.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் " 1968 ம் ஆண்டின் நுவரெலியா நான்கு கடவைகள் கிராமச் சபை தெருவில் தருமப்பணத் திரட்டுதல்கள் ஒழுங்கு விதிகள் " என எடுத்து ஆளப்படலாம்.

2. சந்தர்ப்பம் வேறுவண்ணம் இருந்தாலன்றி, இவ்வொழுங்கு விதிகளில்—

" தலைவர் " எனில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு கடவைகள் கிராமச் சபையின் தலைவர் எனப் பொருள்படும் ;

" தருமம் " எனில் எத்தரும ஸ்தாபனத்தின் அல்லது தருமநோக்கத்தின் உபயோகத்துக்காக அல்லது உபகாரத்துக்காக ஒரு திரட்டு அல்லது விற்பனை நடத்தப்படுகிறதோ அது எனப் பொருள்படும் ;

" திரட்டுதல் " எனில், தரும அல்லது அதுபோன்ற வேறு நோக்கத்தின் பொருட்டு பணம் திரட்டுதல் எனப் பொருள்படும் ;

" திரட்டுபவர் " எனில் அத்தகைய திரட்டுதலின் பொருட்டுப் பொதுமக்களிடமிருந்து பணந்திரட்டுவதன் மூலம் திரட்டும் வேலை எதிலும் பங்குபற்றும் ஒரு ஆள் எனப் பொருள்படும் ;

" நிதி " எனில், பணந்திரட்டப்படும் அல்லது விற்பனை ஒன்று நடத்தப்படும் தருமமோ அல்லது பரோபகார நோக்கம் எதற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கும் அல்லது ஒதுக்கப்படவிருக்கும் நிதி எனப் பொருள்படும் ;

" விற்பனை " எனில் தரும அல்லது அதுபோன்ற வேறு நோக்கத்துக்காக நடத்தப்படும் பொருள் விற்பனை ஒன்று எனப் பொருள்படும்;

" விற்பவர் " எனில், விற்பனை ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பொருள் அல்லது பொருட்களைப் பொதுமக்களுக்கு விற்பதன் மூலம் அத்தகைய விற்பனையில் பங்கெடுத்துக்கொள்ளும் ஒரு ஆள் எனப் பொருள்படும் ;

" கிராமப் பிரதேசம் " எனில், நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு கடவைகள் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

3. எவரும்—

(அ) அவர், ஒரு சபையின் அல்லது சமாஜத்தின் அங்கத்தவராக அல்லது ஒரு தருமத்தாபனத்தின் அல்லது நிதியின் முகாமைக் குழுவின் அங்கத்தவராக இருந்தாலன்றியும்,

(ஆ) அவ்விதம் திரட்டுதலுக்கு அல்லது விற்பனைக்கு அதிகாரமளிக்கும் இதன் பின்னல் விதிக்கப்பட்டவாறான அனுமதிப்பத்திர மொன்றை அச்சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழு தலைவரிடமிருந்து பெற்றிருந்தாலன்றியும்

கிராமப் பிரதேசத்தினுள்ளிருக்கும் தெரு அல்லது பொது இடம் எதிலும் திரட்டல் அல்லது விற்பனை எதனையும் ஆக்கவோ அல்லது ஊக்கவோ கூடாது. எனினும் இவ்வொழுங்கு விதிகளின் முற்போந்த ஏற்பாடுகள் எதுவும்—

(i) திறந்தவெளிக்கூட்டமொன்றில் பணந் திரட்டுதலையோ அல்லது

(ii) அந்த விற்பனைப்பணத்தின் ஒரு பாகம் ஏதாவது ஒரு தரும நோக்கத்துக்கு வழங்கப்படும் என்று விற்பவராலோ அல்லது அவருக்காக வேறு எவராலுமோ அறிவிக்கப்படாது சாதாரணமாக வியாபாரத்தின்போது அல்லது ஜீவனோபாயத்தின் பொருட்டு வீதி அல்லது பொது இடம் எதிலும் செய்யப்படும் ஒரு பொருளின் விற்பனையை

தடுப்பதாகவோ அல்லது பாதிப்பதாகவோ கருதக்கூடாது.

4. இவ்வொழுங்கு விதிகளுக்கிணங்க அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்ட தருமஸ்தாபனம் அல்லது தருமநிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுவின் அங்கத்தவராக இருக்கும் எவரும் அவ்வனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கமைவாக அல்லாத முறையில் பணந் திரட்ட அல்லது விற்பனை நடத்தச் செய்யவோ அல்லது அவற்றைச் செய்ய அல்லது நடத்த அனுமதிக்கவோ கூடாது.

5. அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்—

(அ) இதனகத்துள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள " அ " என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் தேவைப்படும் பணந்திரட்டுதலை அல்லது விற்பனையை ஆக்கஞ் செய்யும் தருமஸ்தாபனம் அல்லது தரும நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுவின் பதவியினர் ஒருவரால் அல்லது பலரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) தலைவருக்கு விலாசமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) பணந்திரட்டுதற்கு அல்லது விற்பனை நடத்துதற்குக் குறிக்கப்பட்ட மாதத்துக்கு முந்திய மாதத்தின் முதற் தினத்துக்குப் பிந்தாமல் செய்யப்பட வேண்டும்.

ஒரு விண்ணப்பம் முற்கூறப்பட்ட திகதிக்குப் பிந்திச் செய்யப்பட்டிருப்பினும் விசேஷ சந்தர்ப்பங்களில் தலைவர் அதனை ஏற்கலாம்.

6. தலைவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்:—

(1) அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நாளன்றும், நேரத்துக்குள்ளும் வீதிகள் அல்லது இடங்களிலும் மாத்திரமே பணந்திரட்டவோ அல்லது விற்பனை நடத்தவோ வேண்டும்.

(2) பதினைந்து வயதுக்குட்பட்ட எவருக்கும் பணந்திரட்டுபவராக அல்லது விற்பனை செய்பவராகக் கடமையாற்ற அதிகாரமளிக்கவோ அல்லது அனுமதியளிக்கவோ கூடாது.

(3) பணந்திரட்டுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் பணந்திரட்டுதற்கு அல்லது விற்பனை செய்தற்குக் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னர், தருமஸ்தாபன அல்லது தருமநிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுவின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அங்கத்தவர், அதற்கான எழுத்து மூலமான அதிகாரப்பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) திரட்டும் அல்லது விற்பனை செய்யும் பணங்களை வைப்பதற்கான பெட்டிகள் அல்லது கலங்கள் தொடரிலக்கமிடப்பட்டு முத்திரையை உடைக்காது அவற்றினுள்ள பணத்தை எடுக்கமுடியாதவாறு பக்குவமாக மூடி, முத்திரையிடப்பட்டிருக்கவும் வேண்டும். அன்றியும், பணந்திரட்டுதற்கு அல்லது விற்பனை செய்தற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் பெட்டி அல்லது கலம் ஒவ்வொன்றினதும் தொடரிலக்கங்களைக் குறித்து வைத்துக்கொள்ளவும் வேண்டும்.

(5) அத்தகைய பெட்டி அல்லது கலம் ஒவ்வொன்றிலும்—

(அ) அத்தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின் அல்லது நோக்கத்தின் பொருட்டுப் பணந்திரட்டப்படுகிறதோ அல்லது விற்பனை நடத்தப்படுகிறதோ அதன் பெயரும் ;

(ஆ) பணந்திரட்டும் அல்லது விற்பனை நடத்தும் திகதியும் ;

(இ) அப்பெட்டிக்கு அல்லது கலத்துக்கு அத்தரும ஸ்தாபனம் அல்லது நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுவினல் இடப்பட்ட தொடரிலக்கமும்

தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(6) (அ) பணந்திரட்டும் அல்லது விற்பனை செய்யும் சேவைக்காக பணந் திரட்டும் அல்லது விற்பனை செய்யும் எவருக்கும் ; அல்லது

(ஆ) பணந்திரட்டுவதை அல்லது விற்பனையை ஊக்கப்படுத்துவதில் அல்லது நடத்துவதில் தொடர்பு கொண்டிருக்கும் எவருக்கும்

அவருடைய பெயரும் கொடுக்கப்படும் பணம் அல்லது வெகுமதியின் தன்மையும் அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ, பணம் அல்லது வெகுமதி எதுவும் கொடுக்கக்கூடாது.

7. எவரும்—

(அ) அவர் பதினைந்து வயதுக்குட்பட்டவராக இருப்பின் ; அல்லது

(ஆ) அவரிடம் தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை; சமாஜம் அல்லது முகாமைக் குழுவின் செயலாளரால் அல்லது அத்தகைய அதிகாரம் வழங்க தத்துவம் அளிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட எழுத்து மூலமான அதிகாரம் இல்லாதிருப்பின் ; அல்லது

(இ) அவ்விதம் பணந்திரட்டுதற்கு அல்லது விற்பனை நடத்துதற்கு ஒரு அனுமதிப்பத்திரத்தினல் தலைவரால் அதிகாரமளிக்கப்படவில்லை என அறிந்திருப்பின் அல்லது நம்ப இடமிருப்பின்

பணம் திரட்டும் அல்லது விற்பனை நடத்தும் எச்செயலினும் திரட்டுபவராக அல்லது விற்பனையாளராகக் கருமமாற்றக்கூடாது.

8. பணந்திரட்டுதல் அல்லது விற்பனை செய்தல் எதனேடும் தொடர்பாகக் கருமமாற்ற எவரும்—

(அ) பக்குவமாக மூடப்பட்டும் முத்திரையிடப்பட்டும் அதில் பின்வருவன தெளிவாக எழுதப்பட்டுமிராத பணந்திரட்டுதற்கான பெட்டி அல்லது பாத்திரம் எதனையும் கொண்டு செல்லவோ அல்லது உபயோகிக்கவோ கூடாது :—

(1) எத்தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின் அல்லது நோக்கத்தின் பொருட்டுப் பணந்திரட்டப்படுகிறதோ அல்லது விற்பனை நடத்தப்படுகிறதோ அதன் பெயர்;

(2) பணந்திரட்டும் அல்லது விற்பனை நடத்தும் திகதி;

(3) அப்பெட்டிக்கு அல்லது பாத்திரத்துக்கு தருமஸ்தாபன அல்லது நிதிச் சபையால் சமாஜத்தால் அல்லது முகாமைக்குழுவினல் தரப்பட்ட தொடர்பிலக்கம் ; அல்லது

(ஆ) அதன் பொருட்டாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டதல்லாத எத்திகதியிலும் அல்லது எந்நேரத்திலும் அல்லது எவ்வீதியிலும் அல்லது இடத்திலும் பணந்திரட்டவோ அல்லது விற்பனை நடத்தவோ கூடாது ; அல்லது

(இ) எவ்வீதியின் வாகனப்பாதையிலும் அல்லது எவ்வீதியின் நடைபாதையிலும் அல்லது பொது இடமெதிலும், அப்பாதையை அல்லது பொது இடத்தைச் சட்டபூர்வமாக உபயோகிக்கும் எவருக்கும் தடை செய்யக்கூடிய அல்லது கோபமுண்டாக்கக்கூடியவரையில் பணந்திரட்டவோ அல்லது விற்பனை நடத்தவோ கூடாது ; அல்லது

(ஈ) பணந்திரட்டுதற்காக அல்லது விற்பனை நடத்துதற்காக முப்பது அங்குலத்துக்கு மேற்பட்ட நீளத்தையும் இருபது அங்குலத்துக்கு மேற்பட்ட அகலத்தையும் உடைய மேசை எதையும் அல்லது பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் அல்லது இருக்கக்கூடிய மேசை எதையும் பணந்திரட்டுதற்காக அல்லது விற்பனைக்காக உபயோகிக்கக்கூடாது ; அல்லது

(உ) தாம் பணந்திரட்டும் அல்லது விற்பனை நடத்தும் இடத்தில் மிருகமெதையும் வைத்திருக்கக்கூடாது ; அல்லது

(ஊ) பணந்திரட்டுகையில் அல்லது விற்பனையின்போது எவரையும், அவருக்குக் கோபமுண்டாகக்கூடியவகையில் கெஞ்சக்கூடாது ; அல்லது

(எ) பணந்திரட்டுகையில் அல்லது விற்பனை செய்கையில் பெற்ற பணமெதையும் முத்திரையிடப்பட்ட பெட்டியில் அல்லது பாத்திரத்தில் அல்லது தமக்குக் கொடுக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட பெட்டி அல்லது பாத்திரமொன்றில் இட்டுவைக்கத் தவறக்கூடாது ; அல்லது

(ஏ) திரட்டுதல் அல்லது விற்பனை முடிந்தபின்னர் அத்தகைய பெட்டி அல்லது பாத்திரத்தைப் பாரமெடுப்பதற்கு தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை சமாஜம் அல்லது முகாமைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரிடம் தம்மிடம் கொடுக்கப்பட்ட பெட்டி அல்லது பாத்திரம் ஒவ்வொன்றையும் அதன் முத்திரை தீண்டப்படாத நிலையில் கையளிக்கத்தவறவோ அல்லது எக்காரணத்தைக் கொண்டும் கையளிக்க மறுக்கவோ கூடாது.

9. பணந்திரட்டுபவராக அல்லது விற்பனை செய்பவராகக் கருமமாற்றும் ஒவ்வொருவரும் தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுவினால் தமக்கு வழங்கப்பட்ட எழுத்து மூலமான அதிகாரப் பத்திரத்தைப் பொலிஸ் உத்தியோகத்தர் எவரும் பரிசோதிக்கக் கேட்டால் அவர் அதனை உடனே காட்ட வேண்டும்.

10. (1) பணந்திரட்டிய அல்லது விற்பனை நடத்திய திகதிக்குப் பின்னர் ஒரு மாதத்துக்குள் தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழு—

(அ) அத்தகைய திரட்டு அல்லது விற்பனையில் பெற்ற பணத்தொகை சம்பந்தமாக ஏற்பட்ட செலவுகளைக் கொண்ட ஒரு அறிக்கையை இத்துடனிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள " ஆ " பத்திரவடிவத்தில் தயாரிக்கச் செய்து, தருமஸ்தாபன அல்லது நிதிச் சமாஜம் அல்லது முகாமைக்குழுவினால் அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பதவியினர் இருவரால் கையெழுத்திடவும் செய்தல் வேண்டும் ; மேலும்

(ஆ) தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக் குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு கணக்குப் பரிசோதகரைக் கொண்டு அல்லது அப்படியான ஒரு கணக்குப்பரிசோதகர் இல்லாத பட்சத்தில் அத்தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை சமாஜம், அல்லது முகாமைக்குழுவின் அங்கத்தவரல்லாத பொறுப்புள்ள ஒருவரைக் கொண்டு அவ்வறிக்கையை பரிசோதிக்கச் செய்யவும் வேண்டும் ; மேலும்

(இ) இவ்வறிக்கையில் காட்டப்பட்ட செலவினங்களுக்கு அத்தாட்சியாகவுள்ள பற்றுச்சீட்டுக்கள், உறுதிச்சீட்டுக்களுடன், அவ்விதம் பரிசோதிக்கப்பட்ட அறிக்கையின் மூலப் பிரதியைத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) பணந்திரட்டுதற்காக அல்லது விற்பனை நடத்துதற்காக ஏற்பட்ட முழுச் செலவுகளையுமோ அல்லது அவற்றின் பகுதியையோ திரட்டப்பட்ட அல்லது விற்பனையால் பெற்ற பணங்களல்லாத சகாயப்பணங்களிலிருந்து செய்யப்படுமிடத்து அப்படியான சகாயப்பணங்களின் விவரங்களை அறிக்கையின் " வரவு ", " செலவு " ஆகிய இருபகுதியிலும் காட்டுதல் வேண்டும்.

11. திரட்டப்பட்ட அல்லது விற்பனையால் வந்த பணம், எத்தருமஸ்தாபனம் அல்லது நிதி அல்லது நோக்கத்துக்காகத் திரட்டப்பட்டதோ அல்லது விற்பனை நடத்தப்பட்டதோ அதன் பொருட்டே அப்பணம் முறைப்படி பிரயோகிக்கப்பட்டதெனத் திருப்திப்படுத்தற்கு அத்தாட்சி காட்டும்படி தலைவர் கேட்கும்போது அவ்வத்தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை சமாஜம் அல்லது முகாமைக்குழு ஒவ்வொன்றும் அவ்வாறு காட்ட வேண்டும்.

### அட்டவணை

### படிவம் " அ "

### அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பம்

1. பணந்திரட்டலுக்கு அல்லது விற்பனைக்குப் பொறுப்புள்ள சபை, சமாஜம் அல்லது குழுவின் பெயர் : ————.

2. விலாசம் : ————.

3. தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுப் பதவியினரின் அல்லது திரட்டலுக்கு அல்லது விற்பனைக்கு கூட்டாகப் பொறுப்புள்ள அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பஞ் செய்பவர்களின் பெயரும் விலாசமும் : ————.

4. பயனடையவிருக்கும் தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின் பெயர் : ————.

5. தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின் நிருவாக மத்திய நிலையத்தின் விலாசமும், செயலாளரின் பெயரும் விலாசமும் : ————.

6. தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின் குறிக்கோள்கள் : ————.

7. பணந்திரட்ட அல்லது விற்பனை நடத்த எண்ணியிருக்கும் திகதி : ————.

8. பணந்திரட்ட அல்லது விற்பனை நடத்த எண்ணியுள்ள பிரதேசம் : ————.

9. பணந்திரட்டும் அல்லது விற்பனை நடத்தும் முறை : ————.

10. பணந்திரட்டுவதை ஊக்கப்படுத்தும் அல்லது விற்பனையை நடத்தும் ஆட்களுக்கு (ஏதும் கொடுப்பதாயிருந்தால்) கொடுக்கும் பணமும், அத்தகையவர்களின் பெயரும் விலாசமும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட பணத்தொகையும் : ————.

11. செலவு செய்தல், பெற்ற பணம் முழுவதும் தரும ஸ்தாபனத்துக்கு அல்லது நிதிக்கு பயன்படுத்தப்படுமா அல்லது வேறு எந்நோக்கத்துக்காகவும் அதிலிருந்து பணம் எடுக்கப்படுமா ? அப்படி ஏதும் அதிலிருந்து எடுக்கப்படுவதாயின் எந்நோக்கத்துக்காக எடுக்கப்படுகிறது என்பதையும் அப்படி எடுக்கப்படும் பணத்தின் மதிப்பீடு ஒன்றையும் தரவும் : ————.

12. இவ்விண்ணப்பத்தைச் செய்யும் ஆட்களின் கையொப்பங்கள் : ————.

13. விண்ணப்பத்தின் திகதி : ————.

தலைவர் அவர்கட்கு,
நான்கு கடவைகள் கிராமச் சங்கம் (நு. எ.),
நுவரெலியா.

### படிவம் (ஆ)

### வரவு செலவு அறிக்கை

(i) வங்கியில் கணக்கில்லாத இடத்து—பணந் திரட்டலுக்கு அல்லது விற்பனைக்குப் பொறுப்பாகவுள்ள சபை, சமாஜம் அல்லது குழுவின் பெயர் :

பயனடையவிருக்கும் தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின பெயர் :
திரட்டும் அல்லது விற்பனை நடத்தும் திகதி :

### வரவு செலவு அறிக்கை

| வரவு | தொகை ரூ. ச. | மொத்தம் ரூ. ச. | செலவு | தொகை ரூ. ச. | மொத்தம் ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| திரட்டியவர்களின் (விற்பனை செய்தவர்களின்) பட்டியலில் உள்ளபடி தெருக்களில் திரட்டப்பட்ட தொகை (விற்பனையால் பெற்றது) பட்டியல் அணைக்கப்பட்டுள்ளது | .. | .. | அச்சிடுவதற்காக .. | .. | .. |
| | .. | .. | தபாற்செலவுகள் .. | .. | .. |
| | .. | .. | விளம்பரம் .. | .. | .. |
| | .. | .. | தெருத்திரட்டுப் பெட்டிகளும் வாகனங்களும் பட்டிகளும் வேறு சின்னங்களும் | | .. |
| வேறு வழிகளில் .. .. | .. | .. | | | .. |
| நன்கொடைகள் .. .. | .. | .. | ஏனையவை .. | .. | .. |
| அணைக்கப்பட்டிருக்கும் பட்டியலின்படி நன்கொடைகள் .. .. | .. | .. | மீதியைச் செலவிட்ட முறை (விவரங்கள்) | .. | .. |
| வங்கி வட்டி .. .. | .. | .. | | .. | .. |
| ஏனையவை, அதாவது .. | .. | .. | | .. | .. |

முற்கூறப்பட்ட சபை, சமாஜம், அல்லது குழுவினால், அதிகாரமளிக்கப்பட்ட இதன் கீழ் கையொப்பமிடும் பதவியினராகிய நாங்கள் முற்போந்த வரவு செலவு அறிக்கை உண்மையானதென்றும் சரியானதென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

1. பெயரும் கையொப்பமும் :
பதவியின் தன்மை :
விலாசம் :

2. பெயரும் கையொப்பமும் :
பதவியின் தன்மை :
விலாசம்:

கணக்குப் பரிசோதகருடைய அல்லது தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை, சமாஜம் அல்லது முகாமைக்குழுவின் அங்கத்தவரல்லாத பொறுப்பு வாய்ந்த ஒருவருடைய உறுதிப்பத்திரம் : ————.

மேற்படி வரவு செலவு அறிக்கையை நான் முறையாகப் பரிசோதித்து சரியெனக் கண்டுள்ளேன் என்றும் அதோடு தொடர்புள்ள உறுதிச் சீட்டுகளையும் பற்றுச்சீட்டுக்களையும் ஆராய்ந்து சரிபார்த்துள்ளேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

பெயரும் கையொப்பமும் : ————.

தகைமை, பட்டம் அல்லது தொழில் : ————.

விலாசம் : ————.

திகதி : ————.

(ii) வங்கிக் கணக்கு இருக்குமாயின் பெறப்படும் பணங்கள் யாவும் உடனுக்குடன் வங்கியில் கட்டப்படவேண்டியதுடன் செலவுகள் எல்லாவற்றுக்குமுரிய பணங்கள் காசோலையாகவே கொடுக்கப்படவும் வேண்டும். திரட்டலுக்கு அல்லது விற்பனைக்குப் பொறுப்புள்ள சமாஜம் அல்லது குழுவின் பெயர் : ————.

பயனடையும் தருமஸ்தாபனத்தின் அல்லது நிதியின் பெயர் : ————.

திரட்டும் அல்லது விற்பனை செய்யும் திகதி : ————.

### வரவு செலவு அறிக்கை

| வரவு | தொகை ரூ. ச. | மொத்தம் ரூ. ச. | செலவு | தொகை ரூ. ச. | மொத்தம் ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| திரட்டியவர்களின் (விற்பனை செய்தவர்களின்) பட்டியலில் உள்ளபடி திரட்டப்பட்ட (விற்பனையால் பெற்ற) தொகை | .. | .. | வங்கிப் பற்றுச்சீட்டுகள் | .. | .. |
| பட்டியலில் அணைக்கப்பட்டுள்ளது .. | .. | .. | | .. | .. |
| வேறுவழிகளில் .. .. | .. | .. | | .. | .. |
| நன்கொடைகள் .. .. | .. | .. | | .. | . |
| அணைக்கப்பட்டிருக்கும் அட்டவணைப்படி | .. | .. | | .. | . |
| ஏனையவை, அதாவது .. | .. | .. | | .. | . |

வங்கிக் கணக்கு

| வரவு | தொகை ரூ. ச. | மொத்தம் ரூ. ச. | செலவு | தொகை ரூ. ச. | மொத்தம் ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| உரொக்க வரவுகள் | .. | .. | .. அச்சுச் செலவும் காகிதாதிகளும் | .. | |
| | .. | .. | .. தபாற் செலவும், விளம்பரம், | .. | |
| | .. | .. | .. தெருத்திரட்டு பெட்டிகள், வாகன | .. | |
| | .. | .. | .. பட்டிகளும், வேறு சின்னங்களும் | .. | |
| | .. | .. | .. வேறு அம்சங்கள் | .. | |
| | .. | .. | .. மீதியைச் செலவிட்ட முறை (விபரங் | . | |
| | .. | .. | .. ரங்கள் தருக) .. | .. | |

முற்கூறப்பட்ட சபை, சமாஜம் அல்லது குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட இதன் கீழ்க் கையொப்பமிடும் பதவியினராகிய நாங்கள் முற்போந்த வரவு செலவு அறிக்கை உண்மையானதென்றும் சரியானதென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

1. பெயரும் கையொப்பமும் : ————.

பதவியின் தன்மை : ————.

விலாசம் : ————.

2. பெயரும் கையொப்பமும் : ————.

பதவியின் தன்மை : ————.

விலாசம் : ————.

கணக்குப் பரிசோதகருடைய அல்லது தருமஸ்தாபன அல்லது நிதிச் சபை சமாஜம் அல்லது முகாமைக்குழுவின் அங்கத்தவரல்லாத பொறுப்பு வாய்ந்த ஒருவருடைய உறுதிப்பத்திரம் : ————.

மேற்படி வரவு செலவு அறிக்கையை நான் முறையாகப் பரிசோதித்து சரியெனக் கண்டுள்ளேன் என்றும் அதோடு தொடர்புள்ள உறுதிச் சீட்டுகளையும் பற்றுச்சீட்டுக்களையும் ஆராய்ந்து சரிபார்த்துள்ளேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

பெயரும் கையொப்பமும் : ————.

தகைமை, பட்டம் அல்லது தொழில் : ————.

விலாசம் : ————.

திகதி : ————.

3-223—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

பபாஅ/ஆ 2/268

## வாடகை மட்டுப்படுத்தற் சட்டம்

(274 ஆம் அத்தியாயமான) வாடகை மட்டுப்படுத்தற் சட்டத்தின் 2 ஆவது பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாச ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக—

(அ) கலஹிற்றியாவைக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசத்தை முற்கூறப்பட்ட சட்டம் அதனுள் நடைமுறையிலிருக்கவேண்டியதொரு பிரதேசமாக வெளிப்படுத்துகிறேன் ; அத்துடன்

(ஆ) இவ்வறிவித்தல் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியை இவ்வறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியாக நியமிக்கிறேன்.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் உ.

3-240—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாச ஆகிய நான், களுத்துறை மாவட்டத்திலுள்ள இத்தப்பானைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை அக்கிராமப் பிரதேசத்தில் ஒரு காணி வரியை அப்பிரிவின் கீழ் விதித்து அறவிடுவதற்கு அக்கிராமச் சபைக்கு இவ்வறிவித்தல் வாயிலாக அதிகாரமளிக்கிறேன்.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் உ.

3-221—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

எல்டீ—பி 74/39

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5(2) ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை

ஆர் பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
7.2.1970.

கட்டளை

1968, யூன் 14 ன் 14,806 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்து வியூதவில்லி ஹத்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள வியூதக் கிராமப் பிரதேசத்தை மாற்றித் திரும்ப வரையறை செய்வதும் ஹேவவிஸ்ஸ கிராம பிரதேசத்தை அமைத்தலும் பற்றிய கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட பிரிவினையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதன்கண்ணுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகின்றது.

அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையும் பழைய கிராமப் பிரதேசததுக் கிராமச் சபையின் பின்னுரித்தாளியாக இருக்கும்.

2. 1968 திசெம்பர் 31 ல் நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினுல் ஆக்கப்பட்ட சகல துணைவிதிகளும், அத்துணைவிதிகள் அப்புதிய கிராமப் பிரதேசத்தோடு சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்திலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டியதுடன் அவை அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினுல் ஆக்கப்பட்டனவாகக் கருதப்படவும் வேண்டும்.

3. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலிருக்கும் பணத்தொகை 1969 சனவரி 1 ல் 9: 10 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்பட்டு வியூத, ஹேவவிஸ்ஸ ஆகிய கிராமப் பிரதேசங்களினது கிராமச் சபைகளின் சமுதாய நிதிகளில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

4. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த பின்வரும் அசைவுள்ள சொத்துக்கள் 1969 சனவரி 1 விருந்து புதிய கிராமப் பிரதேசமான ஹேவவிஸ்ஸ கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவாகவும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் மீதியாயுள்ள அசைவுள்ள சொத்துக்கள் புதிய கிராமப் பிரதேசமான வியூத கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவாகவும் கருதப்படல் வேண்டும் :—

5 கைபிடிக் கதிரைகள்
2 எழுத்து மேசைகள்
3 மாநாட்டு மண்டபமேசைகள் (பழையவை)
1 சாதாரண தட்டு
1 மணிக்கூடு நிறுத்தி
1 சிங்களத் தட்டச்சுப்பொறி (9 அங்குலம்)
1 துளையிடுகருவி
இரண்டு மைக்கூடுகளுடன் கூடிய ஒரு நிறுத்தி
1 கண்ணுடி ஊசிக்கொள்கலம்
1 மணிக்கூடு
1 வாளி
1 அலவாங்கு
1 ஒற்றைச்சில்லு வண்டி
1 சிறு அனுமாரி
12 கைபிடிக் கதிரைகள்
1 ரில்லி விளக்கு
இரண்டு கோறளைகளைக்காட்டும் ஒரு பிரதேசப்படம்
2 பெரிய கத்திகள்
1 கோப்பனுமாரி
2 புத்தக ராக்கைகள்
3 சாதாரண கதிரைகள்
ஆதனநிரலிற் குறிப்பிடப்பட்ட புலுனுலப் பிரசவ நிலையத்திலுள்ள சகல பொருட்களும்.

5. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக இருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1969 சனவரி 1 லிருந்து எப்புதிய கிராமப் பிரதேசத்தினுள் அக்காணி, கட்டிடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கின்றதோ, அக்கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குரிய உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்டவரையில், 1969 சனவரி 1 விருந்து அந்தந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டுள்ளனவாகக் கருதப்படல் வேண்டும்.

7. பழைய கிராமச் சபையில் சேவையாற்றிய ஊழியர்களின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்கு வழங்கிய உதவு தொகைகள் சம்பந்தமான பொறுப்புகள் வியூத, ஹேவவிஸ்ஸ ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளிடையே 9 : 10 என்ற விகிதாசாரத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

8. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது, வேறுவகையில் விவரிக்கப்பட்டாலன்றி, 1968 யூன் 14 ந் திகதிய 14,806 ஆம் இலக்க இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் விவரிக்கப்பட்ட வியூதக் கிராமப் பிரதேசம் அல்லது ஹேவவிஸ்ஸ கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும் ; அத்துடன்

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது வேவுட, ஹேவவிஸ்ஸ ஆகிய புதிய கிராமப் பிரதேசம் உண்டாவதற்கு முன்பிருந்த வியூதக் கிராமப்பிரதேசம் எனப் பொருள்படும்.

3–246/1—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

எல் டீ—பி 74/36

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
9.12.1969.

### கட்டளை

1968 யூன் 21 ந் திகதிய 14,806/20 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கேகாலை மாவட்டத்து பெலிகல்கோறளைக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள கந்துபிற்றபற்று (வடக்கும் தெற்கும்) கிராமப் பிரதேசத்தை உட்பிரிவினை செய்யும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதன்கண்ணுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகின்றது.

அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பின்னுரித்தாளியாக இருக்கும்.

2. 1968 திசெம்பர் 31 ந் தேதி நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட சகல துணைவிதிகளும், அத்துணைவிதிகள் அப்புதிய கிராமப் பிரதேசத்தோடு சம்பந்தப்பட்ட வரையில் புதிய கிராமப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டியதுடன் அவை அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

3. 1968 திசெம்பர் 31 ந் தேதி பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலிருக்கும் பணத்தொகையில் இரண்டில் ஒரு பங்கு 1969 சனவரி 1 ல் பிந்தெனியாக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலும் எஞ்சியுள்ள இரண்டில் ஒரு பங்கு புதிய கலிகமுவைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலும் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

4. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த பின்வரும் அசைவுள்ள சொத்துக்கள் 1969 சனவரி 1 ல் கலிகமுவைப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படல் வேண்டும். பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினது எஞ்சியுள்ள அசைவுள்ள சொத்துக்கள் புதிய பிந்தெனியாக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

இழுப்பறைகளுடன் கூடிய எழுதுமேசைகள் 2
மேசைகள் 3
கதிரைகள் 12
சிறிய கதிரைகள் 2
மடிப்புக்கதிரைகள் 5
அலுமாரிகள் 2
சிங்களத் தட்டச்சுப்பொறி 1
வாங்கு 1
மைக்கூடு 1
பணிமனை மணி (மேசையில் வைப்பது) 1
கலண்டர் 1
தேசியக்கொடி 1
துளையிடுகருவிகள் 2
அடிமட்டங்கள் 2
ரப்பர் முத்திரைகள் 2
முத்திரைத்தாங்கி 1
ருக்கைகள் 2
பணிமனை ருக்கைகள் 3
கழிவுக்காகிதக்கூடை 1
கத்தி 1
காகிதம் துளையிடுகருவி 1
சுவர்க்கடிகாரம் 1
பொது முத்திரை 1
திகதி முத்திரைத்தட்டு 1

பாரக்கட்டிகள் 3
பஞ்சுக்கூடு 2
அறிவித்தல் பலகை 1
இலங்கை ஆண்டுநூல் 1
கிராம வரைவுப்படம் 1
படச் சட்டம் 1
பெர்குசன் வழிகாட்டி 1
50 அடி நாடாச்சுருள் 1
25 அடி நாடாச்சுருள் 1
பேசின் 1
மண்வெட்டி 1
உருக்குத்தடிகள் 6
கோடரி 1
கொள்கலங்கள் 6
குப்பை வாரி 1
ஒற்றைச்சில்லுவண்டி 1

**பல்லப்பான சிகிச்சா நிலையத்துக்குச் சொந்தமான பொருட்கள்**

அலுமாரி 1
கட்டில் 1
கதிரைகள் 3
பேசின்கள் 2
துவாய் 1
திரை 1
மேசை 1

**அத்துகொடைச் சிகிச்சா நிலையத்துக்குச் சொந்தமான பொருட்கள்**

மேசை 1
கதிரைகள் 2
பேசின் 1
திரை 1

**தமுனுபொலச் சிகிச்சா நிலையத்துக்குச் சொந்தமான பொருட்கள்**

எழுதுமேசைகள் 2
கட்டில் 1
கைபிடிக் கதிரை 1
சாதாரண கதிரை 1
அலுமாரி 1
வாங்குகள் 2
பேசின் 1
பேசின் தாங்கி 1
திரை 1
சவர்க்காரப் பெட்டி 1
சிறுமேசை (டீப்போய்) 1
மேசைகள் 2
துடைதுண்டு 1
கட்டில் விரிப்புகள் 2
தலையணை உறைகள் 2
திரைச்சீலை 1
யன்னல் திரைச்சீலை 1

5. 1968 டிசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1969 சனவரி 1 ல் அக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கும் ஆரயம்பதி, புதுக்குடியிருப்பு ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களில் கிராமச் சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன வாகக் கருதப்படல் வேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குரிய உரிமைகள் கடன்கள் பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்டவரையில் 1969 சனவரி 1 லிருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டி ருப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

7. பழைய கிராமச் சபையில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு இளைப் பாற்றுச் சம்பளம் வழங்கப்படுதற்காகக் கொடுக்கப்பட்ட உதவுநிதிகள் சம்பந்தமான பழைய கிராமச் சபையின் பொறுப்பு கலிகமுவை, பிந்தெனிய ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளிடையே 1 : 1 ஆகிய விகிதத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

8. இந்த அட்டவணையில்—

(அ) " புதிய கிராமப் பிரதேசம் " என்பது வேறுவகையில் விவரிக்கப்பட்டாலன்றி 1968 யூன் 21 ந் திகதிய 14,806/20 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை யிலுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட கலிகமுவைக் கிராமப் பிரதேசத்தையோ பிந்தெனியக் கிராமப் பிரதேசத் தையோ குறிக்கும்.

(ஆ) " பழைய கிராமப் பிரதேசம் " என்பது புதிய கிராமப் பிரதேசங்களாக வருவதற்கு முன்பிருந்து கந்துபிறபற்று (வடக்கும் தெற்கும்) கிராமப் பிரதேசத்தைக் குறிக்கும்.

3–246/2—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## மட்டக்களப்பு மாநகர சபை

### 1970 க்கான ஆதன வரி

1967 ன் 8 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆவது பிரிவினால் திருத்தப்பட்ட வாறான 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 230 (1) ஆம் பிரிவின்படியும் மேற்கூறிய பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதி யுடனும், சபையினால் விதிக்கப்படக்கூடியதாய அத்தகைய வரையறை களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் சபையின் 15, 16, 17, 18, 19 ஆகிய வட்டாரங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு விவரணத்துடனும் கூடிய வீடுகள், கட்டடங்கள் அனைத்தினதும் எவ்வகையான காணிகள், சிறுமனைகள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஏழு (7) வீதமானதும் முறையே 1970 மார்ச் 31, 1970 ஜூன் 30, 1970 செத்தெம்பர் 30, 1970 திசம்பர் 31 ஆகிய திகதிகளில் அல்லது அவற்றுக்கு முன்னராக நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு வரியை 1970 ஆம் ஆண்டுக்கு ஆக்கி, மதிப்பிடுவதற்கு மட்டக்களப்பு மாநகர சபை தீர்மானித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1970 ம் ஆடு மார்ச்சு மீ 1 ந வ.

3–231—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## பண்டாரவளை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான விசேட தண்ணீர் வரி

(255 ம் அதிகாரமாம்) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தில் 130 (ஆ) ஆம் பிரிவின்படியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவ பலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அங்கீகாரத் துடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விலக்குகளுக்கும் அமைவாகவும் பண்டாரவளை நகரசபையின் நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு ஏழு வீதமானதும், கடந்த வருடம் விதித்திருந்தது போன்ற அதே வீதமானதும், முறையே மார்ச்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ஆம் ஆண்டுக்கு பண்டாரவளை நகரசபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு மார்ச்சு மீ 1 ந வ.

3–233—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

எல். உ.—பீ. 24/65.

## வவுனியா நகரசபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான ஆதன வரி

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 160 ம் பிரிவின்கீழும், அப்பிரிவினால் உள்ளூராட்சியமைச்சருக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவங்களைக்கொண்டு கொடுபட்ட அவருடைய அங்கீகாரத்துடனும், வவுனியாப் பட்டினத்துள் உள்ள சகல அசைவற்ற ஆதனத்தினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்குப் பன்னிரண்டு வீதமானதும், முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தேதிகளில் சமமான நான்கு தவணைப்பணங்களாகக் கொடுபடற்பாலது மான வரியொன்றை, சபையினால் விதிக்கப்படக்கூடிய வரையறைகள், மட்டுப்பாடுகள், நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு அமைய வவுனியா நகரசபை 1970 ம் ஆண்டுக்கு விதித்திருக்கிறதென இதனால் அறிவிக்கப்படு கின்றது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1.3.1970.

3–230—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

மன்னார் மாவட்டத்து வங்காலை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 ஆகிய பிரிவின் கீழான பின்வரும் தீர்மானம், அக்கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் கொடுபட்ட நிதியமைச்சரின் சம்மதத்துடன் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென பொதுசனம் அறிவதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 8 ந உ.

### தீர்மானம்

சபையின் கிராமப் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டடங்கள், காணிகள் ஆகிய எல்லாவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு ஆறு வீதமானதும் சமமான நான்கு தவணைப் பங்குகளாக மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31, 1970 ஆகிய திகதிகளில் அல்லது அவற்றுக்கு முன்னதாகக் கொடுபடற்பாலதுமான தண்ணீர் வரி ஒன்றை 1970 ம் ஆண்டுக்கு விதித்து, அறவிடுவதற்கு இச்சபை (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்ளைச் டசட்டத்தின் 40 அ ஆகிய பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

3–252—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தாற்றிருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 (அ) ஆகிய பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திக்கலைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அக்கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் கொடுபட்ட நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன் உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளதெனப் பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

வீ. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 3 ந உ.

### தீர்மானம்

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திக்கலைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை, சொல்லப்பட்ட பிரதேசத்துக்குள் அமைந்துள்ள கட்டிடங் கள், காணிகள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு, சதவீதமானதும் ஒவ்வொரு வருடத்தின் மார்ச்சு 31, யூன் 30 செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளிலன்று அல்லது அதற்கு முன்னர் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப் படற்பாலதுமான ஒரு தண்ணீர் வரியை இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தினுள் 1970 ஆம் ஆண்டிலிருந்து விதித்து அறவிடுவதற்கு 1969 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தாற்றிருத்தப்பட்ட படியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 (அ) ஆகிய பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

நிவித்திகலை : விநியோக நிலைக்கம்பங்கள் இடம் பெற்றுள்ள நிவித்தி கலை நீர் வழங்கல் திட்டத்தின் 5 சங்கிலி நீளமுள்ள 3 சங்கிலி அகலமும் கொண்ட குழாய் நாட்டப்பட்டுள்ள ஒரு பகுதிக்குள் வரும் பிரதேசம் (தொடம்பாவத்தை, பாரவத்தைக் கிராமங்கள் உட்பட).

தாலை : விநியோக நிலைக்கம்பங்கள் இடம்பெற்றுள்ள தாலை நீர் வழங்கல் திட்டத்தின் 5 சங்கிலி நீளமும் 3 சங்கிலி அகலமும் கொண்ட குழாய் நாட்டப்பட்டுள்ள ஒரு பகுதிக்குள் வரும் பிரதேசம்.

கரவிற்றை : விநியோக நிலைக்கம்பங்கள் இடம் பெற்றுள்ள கரவிற்றை நீர்வழங்கல் திட்டத்தின் 5 சங்கிலி நீளமும் 3 சங்கிலி அகலமும் கொண்ட குழாய் நாட்டப்பட்டுள்ள ஒரு பகுதிக்குள் வரும் பிரதேசம்.

வட்டாப்பொத்தை : வட்டாப்பொத்தை விநியோக நிலைக்கம்பங்கள் இடம்பெற்றுள்ள நிவித்திகலை நீர்வழங்கல் திட்டத்தின் 5 சங்கிலி நீளமும் 3 சங்கிலி அகலமும் கொண்ட குழாய் நாட்டப்பட்டுள்ள ஒரு பகுதிக்குள் வரும் பிரதேசம்.

3–241—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

## கிராம சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராம சபைகள் கட்டளைச்சட்டத்தின் 40அ, 40ஆ ஆகிய பிரிவுகளின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து அராலிக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட பின்வருந் தீர்மானம் அச்சட்டத்தின் 46 ம் பிரிவின்கீழ் கொடுபட்ட நிதியமைச்சரின் சம்மதத் துடன் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
29.12.1969.

### தீர்மானம்

இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தினுள் அமைந் துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதி யில் நூற்றுக்கு ஆறு வீதமானதும், ஒவ்வொரு வருடத்திலும் டிசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னதாகக் கொடுபடற்பாலதுமான தண்ணீர் வரியொன்றை, 1969 ம் ஆண்டு தொடக்கம் விதித்து அறவிடு வதற்கு, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அராலிக் கிராமப் பிரதேசத்தின் கிராமசபை, 1961 ம் ஆண்டில் 60 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்ட படியான (257 ம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 40அ, 40ஆ ஆகிய பிரிவுகளின்கீழ் இதனால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

13 ம் இலக்க வட்டாரம்—நாகேந்திரமடப் பிரதேசம்

விநியோகத்தூண்கள் அவற்றில் நிறுத்தப்பட்டுள்ள, தண்ணீர் விநி யோகத் திட்டத்தின் குழாய்களிலிருந்து இருமருங்குகளிலும் 500 அடிகளுக்குட்பட்ட பிரதேசம்.

3–220—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

# பதவிகள் — வெற்றிடம்

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டு வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்பட்டுள்ளன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்துவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின் கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களின், அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையின், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடையவராக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றுண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில், இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர் " களின் தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்தற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்தாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையறையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும். பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ந் தேதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்கு, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதல் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக நிறுத்தப்படும், அதன்பின் பின் போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில் விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சி சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)."

குறிப்பு.—(1) இதில் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

(2) மேற்கண்ட பந்தி 4 (3) (அ) (ஆ) (ஈ) இல் உள்ள ஏற்பாடுகள் அரசாங்கத் திணைக்களங்களில் சேவிக்கும் " பழைய சேர்வு உத்தியோகத்தர்களும் உள்ளூராட்சிச் சேவையில் நியமனங்களை ஏற்றுக் கொள்வதற்குத் தமது பதவிகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தா."

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் " இலங்கையர் " என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக் கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக்குறை வான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச் சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவிகள் வகிக்கும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப் பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தி யோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட் சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச் சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுக மாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமை யீனத்தை உண்டாக்கும். தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளி லும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப் பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப் படவேண்டும் நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது "

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது, தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள் கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய**

**விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாகக் கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாள ரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப் பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேணடுமென்று ஆலோசனை கூறப் படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்க வேண்டும்

(iii) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர் களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும் :—(1) பிறப்புச் சான்றிதழ் (2) ஆங்கிலத்தில்–சிங்களத்தில்–தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்–தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பகாரர்கள் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

......................................பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) ............................பதவிக்கான விண்ணப்பம்
   முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.

2. தேசீய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரை விலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையா யிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி யில் சரியான வயது :————.
   ... ..வருடங்கள் ......மாதங்கள் ........நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி :————.

5. பிறந்த இடம் :————.
   (அ) விண்ணப்பக்காரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப்பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளரா, தாரமிழந்தவரா அல்லது கைம் பெண்ணா :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்–தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1.................... | ........ | ........ | 1.................... | ........ | ........ |
| 2.................... | ........ | ........ | 2.................... | ........ | ........ |
| 3.................... | ........ | ........ | 3.................... | ........ | ........ |
| 4.................... | ........ | ........ | 4.................... | ........ | ........ |
| 5.................... | ........ | ........ | 5.................... | ........ | ........ |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) ஆங்கிலம் :————.

(இ) தமிழ் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் :————

11. பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின் சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன். விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(ii) தற்போதைய சம்பளமும்(படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(iii) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக) :—

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா? உண்டெனில் அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா? இல்லையாயின் எவ்வளவுக்கு கடனாளியாக இருக்கின்றீர் :————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச்சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல்வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும் நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————.

திகதி :————. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

## உள்ளூராட்சிச் சேவை

### பொது சுகாதார தாதி பதவி

1. மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரா சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி இடமாற்றப்படத் தக்கவராவர்.

2. **திரட்டிய வேதனம்.**—(1) இப்பதவிக்குரிய திரட்டிவ வேதனம் பின்வருமாறு : வருடாந்தம் ரூபா 5,304—9 × 144—ரூபா 6,600. வருடாந்தம் ரூபா 5,736 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்கட்கும் நிபந்தனைகட்கும்மிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். கீழ்க்கண்ட 3 (1) பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய, பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதிகளுக்கு இவ்வேதன அளவு பொருந்தும்.

(2) வருடாந்தம் ரூபா 3,864—18 × 144—ரூபா 6,456. வருடாந்தம் ரூபா 5,304 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய வீதங்கட்கும், நிபந்தனைகட்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். கீழ்க்கண்ட 3 (2), 3 (3) ம் பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய தாதிகளுக்கு இவ்வேதன அளவு பொருந்தும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தத்தம் தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்றபடி உரிய வேதன அடிப்படையில் அமர்த்தப்படுவார்கள்.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—(1) பொது தாதி சான்றிதழ், மருத்துவிச்சி சான்றிதழ், பொது சுகாதார தாதி சான்றிதழ், அல்லது

(2) பொது தாதி சான்றிதழ், மருத்துவிச்சி சான்றிதழ், அல்லது

(3) பொது தாதி சான்றிதழ் (சான்றிதழ் பிரதி அனுப்பப்படவேண்டும்).

4. பரீட்சார்த்தி நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்களினால் இலவச கோலவுடை கொடுக்கப்படும். அவர்கள் அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் நகர எல்லைக்குள் வசிக்க வேண்டும்.

5. இவ்வர்த்தமானியின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு 31.3.70 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட இப்படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப் பதிலாகப் (விசேட தகைமைகள்) பின்வருபவை இடப்படவேண்டும்.

13. (1) தாதித் தொழில் சம்பந்தமாகப் பெற்ற தகைமைகள் பற்றிய விபரங்கள்.
(2) பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதியா ?
(3) மருத்துவிச்சித் தொழில் பயிற்சி பெறப்பட்டதா ?

7. விண்ணப்பம் காணமற்போய்விட்டது அல்லது தபாலில் தாமதமாகிவிட்டது என்ற எந்தக் குற்றச்சாட்டும் கருத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசித்தினம் வரைக்கும் தமது விண்ணப்பங்களை அனுப்பத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தாமே தமது நலனை இழப்பவராவார்கள்.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

9. பிறப்புச் சான்றிதழ் பிரதி, வேண்டப்பட்ட தாதிச் சான்றிதழ் ஆகியவை இல்லாது வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு.

10. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து,அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

11. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி முடிவு திகதிக்குப் பின் 2 வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.

செயலாளருக்காக,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மாச்சு மீ 3 ந் உ.

3-237—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897.

## உள்ளூராட்சிச் சேவை

### பரிசோதகர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினுல் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய நிரட்டிய வேதனம் வருமாறு :— வருடாந்தம் ரூபா 4,152—17 × 144—8 × 180—ரூபா 8,040. வருடாந்தம் ரூபா 6,024 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையும் ரூபா 7,500 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையுமுண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய வீதங்கட்கும் நிபந்தனைகட்குமிணங்க ஒரு திருமணப்படியும் கொடுக்கப்படும்.

3. கொழும்பு மாநகரசபையின் எந்திரியியல் ஓவர்சியர்களிடமிருந்தும் ஏனைய உள்ளூராட்சி மன்ற மராமத்து அத்தியட்சர்கள், பரிசோதகர்களிடமிருந்தும் வரும் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு வேண்டிய தகைமைகள்.**—(1) ஏழுவருட செய்முறை அனுபவம், இதில் குறைந்தது இரண்டு வருடங்களாவது சிவில் பொறியியல் வேலைகளில் அனுபவம் அல்லது

(2) சிவில் பொறியியல் வேலைகளில் குறைந்தது 5 வருட செய்முறை அனுபவம். பின்வருபவனவற்றுள் ஏதாவதொரு தொழில் நுட்பத் தகைமையும் பரீட்சார்த்திகளுக்கு இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் (சிவில்).

(ஆ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின், மாநகரப் பொறியியலில் இறுதிச் சான்றிதழ் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு).

(இ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட நிர்மாணத்தில் இறுதிச் சான்றிதழ் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு).

(ஈ) இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் கட்டடக்கலையில் இறுதிச் சான்றிதழ் (3 வருட மாலைப்பயிற்சி வகுப்பு) அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தர தகைமை.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சி சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு 7.4.1970 ந திகதிக்குப் பிந்தாமல் உ. ஆ. சே. அ. ச. செயலாளருக்கு கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும், என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஏ. பி. சமரஜீவ,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 27 ந உ.

3–235—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897.

---

## உள்ளூராட்சிச் சேவை

### நகர இரசாயன பகுப்பாளர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினுல் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் முதலில், உடனடியாக கொழும்பு மாநகர சபைக்கு நியமிக்கப்படுவர்.

3. **வேதனம்.**—இப்பதவிக்குரிய நிரட்டிய வேதனம் வருமாறு— வருடாந்தம் ரூபா 6,720—12 × 360—11 × 480—ரூபா 16,320. வருடாந்தம் ரூபா 11,040 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

(அ) மணமானவர்களுக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய வீதங்கட்கும் நிபந்தனைகட்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

(ஆ) அயர்லாந்திலும், பெரிய பிரித்தானியாவிலும், இரசாயனவியலுக்கான ரோயல் இன்ஸ்ரிடியூட்டின் அங்கத்துவம் பெற்றிருந்தாலன்றி ஒரு உத்தியோகத்தர் வருடாந்தம் ரூபா 11,040 க்கு மேற் செல்லார்.

(இ) நியமனஞ் செய்யுங் காலத்தில் ஏ். ஆர். ஐ. ஸி. உடைய ஒரு உத்தியோகத்தர் வருடாந்தம் ரூபா 7,800 வேதனத்திட்டத்தில் ஆரம்பிப்பார்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரர் நன்கு மதிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையின் இரசாயனவியல் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். (முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியெய்தியவர்கள் விரும்பப்படுவர்).

5. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் கொழும்பு நகர எல்லைக்குள் வசிக்க வேண்டும். சொந்தமாகத் தொழில் நடாத்துவதற்கும் அவர் தவிர்க்கப்படுவார்.

6. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

7. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 31.3.1970 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

9. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஏ. பி. சமரஜீவா,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந உ.

3–234—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897.

# துணை விதிகள்

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து மானிப்பாய்க் கிராமப் பகுதியின் கிராமச் சபையால் உண்டாக்கப்பட்டு, அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் அவருக்கு அறிவிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
12.2.1970.

### துணைவிதி

### தீங்கான அபாயகரமான தொழில்கள்

1. (1) கீழ்க்காணும் தொழில்கள் தீங்கான தொழில்களாகக் கருதப் படும்.

(1) பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்.
(2) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தின் பொருட்டு அழுகிக் கெடும் உணவுப்பொருள்கள் சேகரித்து வைத்தல்.
(3) பசளை அல்லது செயற்கை உரம் செய்தல்.
(4) விளுகிரி செய்தல்.
(5) சவர்க்காரம் செய்தல்.
(6) பாக்குப் பாடம் பண்ணுதல்.
(7) மூன்று மூடைகளுக்கு அதிகமாக தோல், எலும்பு அல்லது செயற்கை உரம் சேகரித்து வைத்தல்.
(8) மீனுக்கு ஐஸ் போடுதல்.
(9) சுருட்டுச் சுற்றுதல்.
(10) புகையிலை சேகரித்து வைத்தல்.
(11) பீடி செய்தல்.
(12) விஸ்கெற் செய்தல்.
(13) கள் சேர்க்கும் நிலையம் வைத்தல்.
(14) விறகுகாலை வைத்தல்.

(2) கீழ்க்காணும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதபடும்.

(1) வைக்கோல் சேகரித்து வைத்தல்.
(2) இயந்திரத்தினால் தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் வடித்தல்.
(3) செக்கினால் தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் வடித்தல்.
(4) ஆபரணங்கள் செய்தல்.
(5) கொல்லுலை வைத்தல்.
(6) அச்சகம் வைத்தல்.
(7) பிராணவாயு பாவிக்கும் கொல்லுலை வைத்தல்.
(8) நெல் குற்றும் ஆலை வைத்தல்.
(9) சுண்ணும்பு சுடுதல், பாடம்பண்ணல், சேகரித்தல் அல்லது தகர்த்தல்.
(10) காற்றடைத்த பானங்கள் செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
(11) புகையிலை பாடம் பண்ணுலும் உலர்த்துதலும்.
(12) சைக்கிள் செப்பனிடும் தொழிற்சாலை வைத்தல்.
(13) மோட்டார் வாகனங்கள் செப்பனிடும் அல்லது திருத்தும் ஸ்தாபனம் வைத்தல்.
(14) எண்ணெயினால் அல்லது வேறு எரிபொருளினால் அல்லது நீராவியினால் அல்லது மின் சக்தியினால் இயங்கும் வியாபாரம் எதுவும்.
(15) மரமரியும் கிடங்கு வைத்தல்—
 (1) இயந்திரம் உபயோகிப்பது.
 (2) இயந்திரம் உபயோகிக்காமல்.

(3) கீழ்க்காணும் தொழில்கள் தீங்கான, அபாயமான தொழில்களாகக் கருதப்படும்.

(1) பற்றறிகளில் மின் சக்தி நிரப்புதல்.
(2) கோடாக் காய்ச்சுதல்.

3–219—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

இலங்கை நிருவாக சேவையின் 5 ஆம் வகுப்பிலுள்ள திரு. டபிள்யூ. டி. எல். பெரேரா (262 ஆம் அத்தியாயமான), உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 4 (1) (சீ) பிரிவின் கீழ், 1970, மார்ச்சு 2 இல் இருந்து அம்பாறை மாவட்டத்து உதவித் தேர்தல்கள் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளாரென்று, இத்தால், பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 2 ந உ.

3–218—13.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,897.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு | 5.3.70 | வியாழன் | 27.2.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5.3.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13.3.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 19.3.70 | வியாழன் | பி. ப 3 30 |
| ஏப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.